**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.9/2021**
**Prosecution Witness**:6

| | | | |
|---|---|---|---|
| Name | **மருத்துவர். ரவிச்சந்திரன்** (PW6 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of January 2026** by V.Nivedha, Assistant DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(A1, A2 are present.)*

**முதல் விசாரணை:–**

1.நான் தற்போது ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 22.10.2020ம் தேதியன்று நான் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவ அலுவலலில் இருந்தபோது மாலை 05.10 மணியளவில் வடுகனூரை சேர்ந்த சண்முகம் என்பவரை அவரது மனைவி பரமேஷ்வரி என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

2. அவர் 22.10.2020ம் தேதி மாலை 04.45 மணியளவில் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் கைகளாலும், கட்டையாலும் வேலப்பம்பாளையம் அரசு மதுபான கடை அருகில் வைத்து தாக்கயிதாக என்னிடம் தெரிவித்தார்.

3.அவரை நான் பரிசோதனை செய்து பார்த்தபோது அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டது. அவருக்கு வெளிபுற காயங்கள் எதுவும்இல்லை. அவர் தனக்கு தோள்பட்டை, நெஞ்சு ஆகிய இடங்களில் வலி இருப்பதாக என்னிடம் கூறினார். நான் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். மருத்துவ சிகிச்சையில் இருந்த அவர் தன்னிச்சையாக சிகிச்சையில் இருந்து வெளியேறிவிட்டார். அதனால் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து கூற இயலாது என கருத்துரை தெரிவித்து சான்று வழங்கினேன். நான் **வழங்கிய சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:27:29 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் பரிசோதித்த சமயத்தில் தனக்கு வலி இருப்பதாக கற்பனையாக கூட கூறி இருக்கலாம் என்றால் இருக்கலாம். பொதுவாக ஒரு நபரை கணுக்கள் உள்ள கட்டையாலோ அல்லது தடியாலோ மாறி மாறி அடித்தால் கன்றிய காயங்களோ அல்லது சிதறிய காயங்களோ ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.29 15:27:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.9/2021**
**Prosecution Witness**:7

| | | | |
|---|---|---|---|
| Name | Thiru.Varatharajan (PW 7 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of January 2026** by V.Nivedha, Assistant DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்சமயம் ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 22.10.2020ம் தேதியன்று நான் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசனை பெற்று 23.10.2020ம் தேதி பகல் 12.00 மணி சுமாருக்கு ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து சண்முகம் வயது 62, த/பெ.முத்துசாமி வெள்ளோட்டம்பரப்பு என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து 13.00 மணிக்கு நிலையம் வந்து மேற்படி புகார் வாக்குமூலத்தின் பேரில் மலையம்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.393/2020 ச/பி.341,294(b), 323, 506(ii) இதச ன் படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்ய கோரப்பட்டது. **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் மற்றைய நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

2. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 23.10.2020ம்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:27:48 +0530

தேதி 14.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான  வேலப்பம்பாளையம் அரசு மதுபான கடை அருகில் சென்று சாட்சிகள் பிரபாகரன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் பின்னர் 17.15 மணிக்கு வேலப்பம்பாளையம் அரசு  மதுபான கடை அருகில் சம்பவ இடத்தில் இருந்து சுமார் 94cm நீளமுள்ள செம்மந்தடி ஒன்றை சாட்சிகள் ரபாகரன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் கார்த்திகேயன், சக்திவேல், பரமேஷ்வரி, பிரபாகரன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கின் வாதி சண்முகம் என்பவரை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான செம்மந்தடியை படிவம் 91 மூலம் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் எதிரிகள் தாமோதரன் மற்றும் பழனிசாமி ஆகியோர்கள் ஈரோடு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்து பிணையில் சென்று விட்டதால் நான் அவர்களை கைது செய்யவில்லை.

4. 11.12.2020ம் தேதி இவ்வழக்கில் காயம் பட்ட வாதி சண்முகம் என்பவருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் ரவிசந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன்.

5. இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் தாமோதரன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் மீது 11.12.2020ம் தேதி பிரிவுகள் 341,294(b), 323,

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:27:55 +0530

506(ii)இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பு) :–**

எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக ஈரோடு தலைமை அரசு மருத்துவமனையில் இருந்து எத்தனை மணிக்கு இண்டிமேசன் கிடைத்தது என்றால் 22.10.2020 அன்று இரவு சுமார் 21 மணிக்கு தகவல் கிடைத்தது. இந்த வழக்கில் காயம் பட்ட அ.சா.1 22.10. 2020 அன்று மாலை காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக புகார் கொடுத்ததாகவும், அந்த புகாரில் அவரது மனைவியும் சாட்சிகள் சக்திவேல், கார்த்திகேயன் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சொல்லி இருந்தால் அது தவறு. அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தையும் முதல் தகவல் அறிக்கையும் நான் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரில் எதிரிகளால் சம்பவ இடத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது என்றோ அல்லது பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டது என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. எதிரிகள் தன்னை திட்டியதால் தனக்கு அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக அ.சா.1 குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதா. இந்த சம்பவம் குறித்து சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள அரசு மதுபான கடையில் வேலை செய்யும் நபர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்த புகாரில் தனக்கும் எதிரிகளுக்கும் ஏதாவது முன்விரோதம் உள்ளதா என குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1க்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கலில் உள்ள பிரச்சனை வைத்துக்கொண்டு அ.சா.1 கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தை நான் முறையாக விசாரிக்காமல் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம், மற்றும் கைப்பற்றுதல் மகஜர் நான் சொன்ன விதத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் அது பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:28:01 +0530

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.29 15:28:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.